# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2021

த.தே-21--சு-1 பாரிசு, 16-05-2021

## தேர்வு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் *

(தனித்தேர்வராகத் தோற்றும் மாணவர்களுக்கானது)

### 01. தேர்வு முறைகள்

வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் - 12 வரையான மாணவர்களுக்கு இவ்வாண்டு எழுத்துத்தேர்வு மட்டுமே நடைபெறும்.

**வளர்தமிழ் 1 தவிர்ந்த, ஏனைய வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அதற்கு முன்னைய வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2020 இற்கு விண்ணப்பித்து, தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் வகுப்பேற்றம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.**

**தேர்வு நாள் : 17-07-2021 சனிக்கிழமை**

தேர்வு நேரம் தொடர்பான தகவல் உரியகாலத்தில் தேர்வு அனுமதிக் கடிதத்தினூடாக அறிவிக்கப்படும்.

### 02. விண்ணப்ப முடிவு நாள் : 10-06-2021

### 03. கட்டண விபரங்கள் :

| | |
|---|---|
| வளர்தமிழ் 1 தொடக்கம் 4 வரை | 40 € |
| வளர்தமிழ் 5 தொடக்கம் 12 வரை | 50 € |

### 04. விண்ணப்ப படிவத்தை பெறுதலும், நிரப்புதலும்

**04-அ. தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2020 இற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்தவர்களுக்கு :**

தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2020 இல் தனித்தேர்வராக விண்ணப்பித்து, தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் வகுப்பேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு, தேர்வுவிண்ணப்படிவம் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் பெயர் மற்றும் தகவல்களைக் கவனமாகச் சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் சிவப்பு எழுதுகோலினால் திருத்தி, இவ்வாண்டு தோற்றவுள்ள வகுப்பினை உறுதிப்படுத்தி, கட்டணம் செலுத்தும் முறை பற்றிய தகவல்களையும் குறிப்பிட்டுக் கையொப்பங்களை இடவும்.

**04-ஆ. தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்கு முதன்முறையாகத் தனித்தேர்வராக விண்ணப்பிப்பவர்களுக்கு :**

தேர்வு விண்ணப்பப்படிவத்தை எமது பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது **www.tamoulcholai.fr** என்ற எமது இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தேர்வு விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை **நீலம் அல்லது கறுப்பு எழுதுகோலினால் தெளிவாக, தனித்தனி எழுத்துகளால்** நிரப்பவும். விண்ணப்பப் படிவத்தில் மாணவரின் அண்மைய ஒளிப்படத்தை ஒட்டி, மாணவரின் வயதை உறுதிசெய்யக்கூடிய பிறப்புச் சான்றிதழ் அல்லது அடையாள ஆவணம் ஒன்றின் பிரதியை இணைக்கவும்.

### 05. விண்ணப்பங்களை அனுப்புதல் தொடர்பான தகவல்கள்

தங்கள் விண்ணப்பங்களை தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம், அல்லது அஞ்சல் மூலமும் அனுப்பலாம். நேரடியாக ஒப்படைப்பதாயின் பணியக நேரத்தினைக் கவனத்தில் கொள்ளவும்.

தேர்வுக்கட்டணத்தைக் காசாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம். **(வங்கியட்டை மூலம் கட்டணம் செலுத்த முடியாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்).**

*** தவிர்க்கமுடியாத, அசாதாரண சூழ்நிலைகளால் மாற்றங்களுக்கு உட்படக்கூடும்**

விண்ணப்பங்களைத் தபால் மூலம் அனுப்புவதாயின் **TAMOULCHOLAI ASSOCIATION** எனும் பெயரில் வரையப்பட்ட காசோலையினை இணைத்து அனுப்பவும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பற்றுச்சீட்டு எம்மால் மின்னஞ்சலூடாக அனுப்பிவைக்கப்படும்.

**குறிப்பு** : தமிழ்மொழிப்பொதுத்தேர்வு 2020 இற்குத் தனித்தேர்வராக விண்ணப்பித்து அதற்குரிய தேர்வுக்கட்டணத்தை மீளப்பெறாதவர்கள், அதற்குரிய பற்றுச்சீட்டினை காசுக்குப் பதிலாக இணைக்கலாம். பற்றுச்சீட்டினைத் தவறவிட்டவர்கள் எமது பணியகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## 06. தேர்வு ஒப்புதல் கடிதம்

**தேர்வு ஒப்புதல் கடிதம் 10-07-2021 இற்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் தங்கள் முகவரிக்கு எம்மால் அனுப்பி வைக்கப்படும்.** அஞ்சல் மூலமான காலதாமதங்களுக்கும் தொலைந்துபோதல்களுக்கும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பொறுப்பேற்க மாட்டாது. 10-07-2021 இற்குள் தேர்வு ஒப்புதல் கடிதம் கிடைக்கவில்லையெனின், தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் அதன் நகலைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 07. தேர்வு நடைபெறும் இடம், நேரம்

அ. தேர்வுகள் நடைபெறும் இடம், நேரம் பற்றிய முழுமையான தகவல்கள் தேர்வு ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பப்படும். தேர்வர்கள், தேர்வு தொடங்கும் நேரத்திற்கு **45 மணித்துளிகள் முன்னதாக** மண்டபத்திற்குள் வருகைதந்திருத்தல் வேண்டும்.
ஆ. தேர்வு ஆரம்பித்து **30 மணித்துளிகளுக்கு மேல் தாமதமாக வரும் மாணவர்கள்** தேர்வு மண்டபத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.

## 08. தேர்விற்கான சீருடை

தேர்வுகளில் பங்குபற்றும் மாணவர்கள் கறுப்புநிற நீளக்காற்சட்டையும் தனிவெள்ளை மேற்சட்டையும் அணிந்திருத்தல் வேண்டும்.

## 09. தேர்விற்கு மாணவர்களை அணியஞ் செய்தல்

தேர்வுகள் வளர்தமிழ் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், இறுவெட்டுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தற் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களைத் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

## 10. தேர்வுப் பெறுபேறுகள்

தேர்வுப் பெறுபேறுகள் **செப்டெம்பர், 2021 முற்பகுதியில்** அனுப்பிவைக்கப்படும். பெறுபேறு தொடர்பாக மீளாய்விற்கு விண்ணப்பிக்க முடியும். மீளாய்வு தொடர்பான விபரங்கள் தேர்வுப் பெறுபேற்றுடன் இணைத்து அனுப்பப்படும்.

## 11. தேர்வுச் சான்றிதழ்கள்

தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2022 இற்கான விண்ணப்பப் படிவமும் **31-12-2021 இற்கு முன் கிடைக்கக்கூடிய வகையில்** தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - ௨௦௨௧

த.தே-21-ஈ-03

## தேர்வு விண்ணப்பம் (முடிவு நாள் : 10-06-2021)

தெளிவாக, தனித்தனி எழுத்துக்களால் நிரப்பவும்

| | | | |
|---|---|---|---|
| 1 | குடும்பப் பெயர் (தமிழில்) | | நிழற்படம் |
| | NOM en Français | | |
| 2 | பெயர் (தமிழில்) | | |
| | Prénom en Français | | |
| 3 | பிறந்த நாள் | நாள் / மாதம் / ஆண்டு | |
| 4 | பால் | ஆண் / பெண் | |
| 5 | பிறந்த இடம் | | |
| 6 | முகவரி (பிரெஞ்சு மொழியில்) | Chez / Bat / Esc | |
| | | N° et Rue | |
| | | Code Postal / Ville | |
| 7 | தொலைபேசி-வீடு | | அலைபேசி |
| 8 | மின்னஞ்சல் | | |
| 9 | விண்ணப்பிக்கும் வகுப்பு | வளர்தமிழ் 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 | |
| 10 | முன்னர் தேர்விற்குத் தோற்றியிருப்பின் | இறுதியாகத் தேர்வெழுதிய ஆண்டு | வகுப்பு |
| | | சுட்டெண் / கோவை எண் | பெறுபேறு |
| 11 | தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2020 இற்கு விண்ணப்பித்திருப்பின், விண்ணப்பித்த வகுப்பு | | |
| 11 | கட்டண முறை | காசு / காசோலை / தமிழ்த்தேர்வு 2020 இற்கான பற்றுச்சீட்டு | |
| 12 | காசோலை / பற்றுச்சீட்டு எண் | | வங்கி |

மேற்படி தரவுகள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் எனவும், தேர்வு வழிகாட்டு நெறிமுறைகளை நாம் அறிந்துள்ளதோடு அவற்றை ஏற்று நடப்போம் எனவும் உறுதியளிக்கிறோம்.

| மாணவர் கையொப்பம் | நாள் | பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம் |
|---|---|---|
| | | |

**பணியகப் பாவனைக்கு மட்டும்**

| | | | |
|---|---|---|---|
| பெற்றுக்கொண்டவர் | | பெற்றுக்கொண்ட தொகை | |
| நாள் | | சிட்டை எண் | |

குறிப்பு :

Tamoulcholai Association, 165 boulevard de la Villette, 75010 Paris.

09 84 06 38 83 tamoulcholai @yahoo.fr www.tamoulcholai.fr

**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்**